DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai.

**CC.NO. 600075/2019**

**Deposition of Lw1 examined as Pw1** **Date: 10.02.2026**

| | |
|---|---|
| Name | முத்து |
| Father's/Husband's Name | அறிவழகன் |
| Village | மாதிரி மங்கலம் |
| Taluk | |
| Age | 27/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 10.02.2026

(A1 Present. A2 Absent. Petitionu/s/ 355 BNSS filed and allowed)

**முதல் விசாரணை**

நான் Chennai ல் உள்ள IT கம்பெனியில் ஒப்பந்த அடிப்படையில் கடந்த ஓராண்டுகளாக பணிபுரிந்து வருகிறேன். தற்சமயம் எனது கையில் அறுவை சிகிச்சை நடந்துள்ளதால் 5 மாத விடுப்பில் உள்ளேன். கடந்த 14.01.2019 ம் தேதி அன்று சுமார் மாலை 05.45 மணி அளவில் அன்று போகிப் பண்டிகை என்பதால் எங்கள் வீட்டு வாசலில் குப்பைகளை போட்டு நானும் எனது அம்மாவும் கொழுத்திக்கொண்டிருந்தோம். எனது வீட்டி எதிர் வீட்டில் ஆஜர் எதிரிகள் வசித்து வருகின்றனர். அன்றைய தினம் 2வது எதிரி விஜயகுமார் வீட்டிற்குள் இருந்து குச்சிக்காரி தேவுடியா மகளே என்று கெட்ட வார்த்தைகளால் நேராக திட்டாமல் ஜாடையில் திட்டினார். எனது மாமா ராஜரத்தினம் அவருடைய நண்பருடன் வீட்டிற்கு வரிசை வைப்பதற்காக வந்திருந்தார். அதனால் நாங்கள் வீட்டிற்குள் வந்து விட்டோம். எனது அம்மா வாசல் தெளித்து கோலம் போடுவதற்காக வாசலுக்கு வந்தார். அப்போது 1ம் எதிரி சந்திரகாசனின் மனைவி இந்திரா என்பவர் எனது அம்மாவுடன் சண்டை போட்டார். பெண்களுக்குள் சண்டை நடந்ததால் நான் செல்லவில்லை. அதன் பிறகு 2வது எதிரி விஜயகுமார் எனது அம்மாவை குச்சிக்காரி, தேவுடியா, புண்டையை கிழித்து அறுத்து விடுவேன் என்று கெட்ட வார்த்தையால் திட்டினார். ரோட்டில் நின்றிருந்த எனது அம்மாவை எங்கள் வீட்டு வாசல்படிக்கு சண்டை வேண்டாம் என்று கூறி அழைத்து வந்து விட்டேன். 1ம் எதிரி சந்திரகாசன் என்பவர் மண்வெட்டியை எடுத்து வந்து தகாத வார்த்தை கூறி எறிந்து கொண்டிருந்த தீயை அணைப்பதற்காக மண்ணை வெட்டி தீயில் போடச்சென்றார். நான் 1ம் எதிரியை பார்த்து உனக்கு அவ்வளவு தான் மரியாதை என்று எனது கையை நீட்டி என் வீட்டு வாசலில் நான் குப்பையை கொழுத்துகிறேன், உனக்கு என்ன வந்தது என்று கேட்டு , ஒழுங்கா போய்விடு என்று கூறினேன். 1 வது எதிரி சந்திரகாசனின் கடைசி மகன் பார்த்திபன் எனது அப்பாவிடம் கையை நீட்டி , நீ வாயா, போயா என்று பேசக்கூடாது என்று சொன்னார். நான் அதற்கு உங்க அப்பா, அண்ணன் என்ன யோக்கியமா, எங்க அம்மாவை பற்றி இவ்வளவு கேவலமாக பேசுகிறார்கள், அப்படிப்பட்டவர்களுக்கு நான் எதற்கு மரியாதை கொடுக்கவேண்டும் என்று கேட்டேன். மேலும் உங்க அப்பா வந்து ஒழுங்கா கல்யாணம் பண்ணினாரா என்று கேட்டேன். சந்தி சிரிச்சு தானே கல்யாணம் பண்ணினார், எதற்காக என்னிடம் வந்து பிரச்சனை செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு 3வது எதிரி பார்த்திபன் வேகமாக வந்து எனது அடிவயிற்றில் கையால் 4 தடவை குத்தினார். நான் வலி தாங்க முடியாமல் குனிந்த போது எனது இடது கையின் தோள்பட்டையை பிடித்துக்கொண்டு தோள்பட்டையில் குத்த ஆரம்பித்தார்.

Mo. Muthu...

என்னால் எதுவும் செய்ய முடியாமல் ரோடு வரை சென்றபோது என்னால் வலி தாங்கமுடியவில்லை. நான் அவரது முகத்தில் 3 முறை அடித்தேன். அதைப்பார்த்துவிட்டு 1ம் எதிரி சந்திரகாசனும், 2ம் எதிரி விஜயகுமாரும் என்னை சரமாரியாக போட்டு தாக்க ஆரம்பித்து விட்டார்கள். அதன் பிறகு விஜயகுமார் அடித்த அடியில் நான் கீழே விழுந்து விட்டேன். 3வது எதிரி பார்த்திபன் காலால் என்னை மிதித்தார். வீட்டிற்கு வந்திருந்த எனது மாமாவும், ஊர்க்காரர்களும் சண்டையை விலக்கி என்னை தூக்கிக் கொண்டு வந்து, உட்கார வைத்து தண்ணீர் கொடுத்தார்கள். மேலும் எதிரிகள் என்னை தொடர்ச்சியாக திட்டிக்கொண்டே இருந்தார்கள். நான் காவல் துறை உதவி எண் 100 க்கு call செய்து எதிரிகள் பிரச்சனை செய்வதாக கூறினேன். என்னால் மருத்துவமனைக்கு கூட செல்ல முடியாத அளவிற்கு பிரச்சனை செய்கிறார்கள் என்று கூறினேன். எதிரிகள் என்னிடம் திரும்ப திரும்ப பிரச்சனை செய்ததை நான் எனது கைப்பேசியில் வீடியோ எடுத்தேன். எனது கையில் அடிபட்டிருந்ததால் என்னால் சரியாக எடுக்க முடியவில்லை. ஆனால் ஓரளவிற்கு என்னுடைய கைப்பேசியில் மேற்படி பிரச்சனையானது பதிவாகி உள்ளது. அதன் பிறகு ஊர்க்காரர்கள் எதிரிகளை அவர்கள் வீட்டிற்குள் அழைத்து சென்று விட்டார்கள். அதன் பிறகு நான் குத்தாலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். அங்கு என்னை பரிசோதித்த மருத்துவர்கள் இடது தோள்பட்டை எலும்பில் பிரச்சனை இருப்பதாக கூறி மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு செல்லுமாறு அறிவுறுத்தினர். நாங்கள் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு செல்லும் முன்பு குத்தாலம் காவல் நிலையத்திற்கு குத்தாலம் மருத்துவமனையில் இருந்து என்னை எனது மாமா அவரது இருசக்கர வாகனத்தில் அழைத்துக்கொண்டும், எனது அம்மாவை எனது மாமாவின் நண்பர் அவரது இருசக்கர வாகனத்திலும் அழைத்துக்கொண்டு மேற்படி பிரச்சனை தொடர்பான புகாரினை கொடுக்கச்சென்றோம். குத்தாலம் காவல்நிலையத்திற்கு சென்ற நான் எனக்கு கையில் வலி அதிகமாக இருந்ததால் என்னால் எழுத இயலவில்லை. நான் சொல்ல சொல்ல அங்கிருந்த போலிசார் எழுதிக்கொண்டார்கள். அந்த புகார் மனுவில் நான் கையெழுத்து செய்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள விபரங்கள் நான் கூறியதுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது)** நான் மேற்படி புகார் மனுவினை காவல் நிலையத்தில் கொடுத்துவிட்டு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். நான்சிகிச்சையில் இருந்தபோது நான் கொடுத்த புகார் சம்பந்தமாக போலிசார் எந்தவித நடவடிக்கையும் எடுக்காததால் எனது மாமா பாஸ்கர் என்பவரை மேற்படி பிரச்சனை தொடர்பான் புகாரினை நீதிமன்றத்தில் கொடுக்கச்சொன்னேன். நான் சிகிச்சையில் இருந்ததால் என்னால் வர இயலவில்லை. எனது மாமா பாஸ்கர் தற்சமயம் உயிருடன் இல்லை. அதன்பிறகு போலிசார் 18.01.2019 ம் தேதி அன்று மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த என்னிடம் நேரடியாக விசாரணை செய்தார்கள். அதன்பிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.இன்று வரை எதிரிகள் என்னிடம் பிரச்சனை செய்து கொண்டே உள்ளார்கள். என் மீது வழக்கு போட வேண்டும் என்ற எண்ணத்தில் என்னிடம் எதிரிகள் பிரச்சனை செய்து வருகிறார்கள். எதிரிகள் ஊர் நாட்டாமைகாரர்கள் என்பதால் எங்களை ஊரை விட்டு விலக்கி வைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்பட்டு வருகிறார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

புகாரை சம்பவம் நடந்த அன்றைய தினமே நான் புகார் கொடுக்க சென்றபோது குத்தாலம் காவல்நிலைய உதவி ஆய்வாளர் புலித்தேவன் என்பவர் நான் சொல்ல சொல்ல புகாரை எழுதினார் என்றால் சரிதான். அனுப்புதல், பெறுதல் மற்றும் கல்லூரியில் என்ன படித்து வருகிறீர்கள் என்று ஓரளவிற்கு சம்பவத்தை பற்றி

A. Anitha

என்னிடம் விசாரித்துபுகாரை எழுதிக்கொண்டார். எனது கையில் வலி இருந்ததால் நான் கையெழுத்து போட்டுவிட்டு அரசு மருத்துவமனைக்கு சென்று விட்டேன். எங்கள் தெருவில் சுமாராக 15 வீடுகள் கூறை வீடுகள்என்றால் சரிதான். எதிரிகளின் வீடும் கூறை வீடு தான் என்றால் சரிதான். எனது வீட்டு வாசலில் எனது அம்மா குப்பைகளை போட்டு கொளுத்தும் போது 1வது எதிரி மண்வெட்டியை எடுத்து வந்து தீயை மூடுவதற்காக வந்தாரா என்றால் ஆமாம். நான் புகார் கொடுக்க சென்றபோது சொன்ன தகவல்களை போலிசார் பாதி எழுதிக்கொண்டு என்னிடம் கையெழுத்து வாங்கி வைத்திருந்ததை நான் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தபோது 18.01.2019 ம் தேதி வந்து போலிசார் என்னிடம் விசாரித்து புகாரை முழுவதுமாக எழுதிக்கொண்டு என்னிடம் படித்துக்காட்டி நான் சரிபார்த்து சரி என்று சொன்ன பிறகு தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். 14.01.2019 ம் தேதி நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்து வந்தேன் என்றால் சுமார் 9 நாட்கள். புகாரில் எனது மாமா மற்றும் அவரது நண்பர்கள் பிரச்சனை நடந்த போது எங்கள் வீட்டில் இருந்தார்கள் என்று சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. போலிசார் என்னை மருத்துவமனையில் வந்து விசாரணை செய்தபோது நான் சுயநினைவுடன் இருந்தேனா என்றால் ஆமாம். போலிசாரிடம் முதல் விசாரணையில் சொல்லி உள்ள தகவல்களை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சுருக்கமாக முக்கியமான விசயங்களை மட்டும் சொன்னேன். அதனையும் நான் படித்துப்பார்த்தேன். என் மீது எதிரிகள் நான் ரூ.1,000/- பணத்தை திருடிவிட்டதாக புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் ஆமாம். தெருக்காரர்கள் சம்பவம் நடந்தபோது எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் சுமார் 10,15 நபர்கள் இருந்தார்கள். அவசர பிரிவு 100 க்கு போன் செய்தபோது போலிசார் வந்தார்களா என்றால் இல்லை. குத்தாலம் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றபோது என்னை தாக்கியதாக சொன்னேன் அதை எழுதினார்களா என்றால் எனக்கு தெரியவில்லை. மருத்துவர் மயிலாடுதுறை அரசு மருத்துமனைக்கு செல்லுமாறு கூறினர். நான் அன்றைய தினமே குத்தாலம் காவல் நிலையத்தில் வந்து புகார் அளித்தேன். 15.01.2018 அன்று காவல்நிலையத்தில் ஆஜராகி புகார் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறு. எங்கள் தெருவில் நிறைய கூறை வீடுகள் இருப்பதால் எனது அம்மா குப்பைகளைபோட்டு எறித்துக்கொண்டிருந்த நிலையில் கூறை வீடுகளுக்கு பாதிப்பு ஆகிவிடும் என்று தெருக்காரர்கள் வந்து எங்களிடம் அறிவுறுத்தினார்கள் என்றாலும் எதிரிகளின் வீடும் கூறை வீடு என்பதால் எதிரிகளும் எங்களிடம் வந்து அறிவுறுத்தினார்கள் என்றாலும் அதனால் அவர்கள் மீது புகார் கொடுக்க வேண்டும் என்பதற்காக நான் இருசக்கரவாகனத்தில் சென்று கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி பொய்யாக எதிரிகள் மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்ள என்னை தகாத வார்த்தைகளால் திட்டவும் இல்லை என்னை தாக்கவும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் குற்ற சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

A. Anitha

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

நீதித்துறை நடுவர் எண் I,
மயிலாடுதுறை